FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8313275

1. District : மாவட்டம் Ranipet PS: காவல்நிலையம் Vigilance Anti Corruption Year: ஆண்டு 2026 FIR No.: மு.த.அ. எண் 10/2026 Date: நாள் 24.10.2026

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 as amended by the PC (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: U/s 7(a)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: –
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்: –
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 23/10/2026 Date to : நாள் வரை –
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் – Time to : நேரம் வரை Prior to 15.00 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 24/10/2026 Time : நேரம் 16.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol IV Time : நேரம் 24/10/2026 16.00 hrs & 16.30 hrs

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் DICP Office, Collectorate Campus, F Block 4th Floor, Ranipet West 1 km.
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் –

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. D. Jagadeesumar (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Duraisamy
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 57 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் –
Date of Issue : வழங்கப்பட்ட நாள் – Place of Issue : வழங்கப்பட்ட இடம் –
(f) Occupation : தொழில் Dy. Inspector Cell Office (g) Address : முகவரி Inspection Cell Office, Vellore Ranipet Tirupathur & T.V. Malai Districts Collectorate Campus, Vellore

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tmt. R. Santhi 9/41, W/o Ramesh, Field Assistant District Town and Country Planning Office, Ranipet District [Ranipet Collectorate Campus]

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
– NO Delay –

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet Enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

24/10/16

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

S. Vijayalakshmi 24/10/16
Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
24-10-16 @ 1700hrs

Name: பெயர் .....S. VIJAYALAKSHMI.....
Rank: நிலை .....No. எண் .....
Inspector of Police
Vigilance & Anti Corruption
Rampet

Attachment in Column No. 12 of FIR in Ranipet V&AC Cr.No.10/2026 u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the PC (Amendment) Act 2018:

பணிந்து சமர்ப்பிக்கப்படுகின்றது. இன்று 24.10.2026 ஆம் தேதி மாலை சுமார் 16.00 மணிக்கு நான் நிலைய ஆஜரில் இருந்தபோது, திரு.D.ஜெகதீஸ்வரன், துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், வேலூர்-9 அவர்கள் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று பார்க்க, அதன் விவரம் பின்வருமாறு:- நாள்:24.10.2026 அனுப்புநர் D.ஜெகதீஸ்வரன், துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், வேலூர்-9. பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, இராணிப்பேட்டை. அம்மையீர், பொருள்: இராணிப்பேட்டை மாவட்டம் - இருதுறை திடீர் கூட்டு சோதனை – மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் கடந்த 23.10.2026 அன்று மேற்கொள்ளப்பட்ட இருதுறை திடீர் கூட்டு சோதனை சம்மந்தமான புகார் சமர்ப்பித்தல் - தொடர்பாக. கடந்த 23.10.2026 பகல் 13.30 மணிக்கு, வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களின் மாவட்ட ஆய்வுக்குழுவின் துணை ஆய்வுக்குழு அலுவலர் D.ஜெகதீஸ்வரன் ஆகிய எனக்கு இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தின் F-Block, 4th Floor-ல் உள்ள மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் புதிய மனைப்பிரிவு அனுமதி, புதிய கட்டிட அனுமதி மற்றும் அனுமதியற்ற மனைப்பிரிவை வரன்முறைபடுத்துவதற்காக வரும் பொதுமக்களிடம் இருந்தும், பதிவு பெற்ற பொறியாளர்களிடமிருந்தும், இடைத்தரகர்கள் மூலமாக நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் உள்ள அலுவலர்கள் தனித்தனியாக பொது மக்களுக்கு செய்ய வேண்டிய வேலைகளுக்காக நேரடியாகவும் கையூட்டாக பணம் பெறுவதாக தகவல் கிடைக்கப்பெற்றது. மேற்படி தகவலை நான் என்னுடைய தகவலர்கள் மூலம் ஊர்ஜிதம் செய்து கொண்டு, இராணிப்பேட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய தங்களுக்கு பகல் சுமார் 14.30 மணிக்கு தகவல் தெரிவித்து, சுமார் 14.45 மணிக்கு அலுவலகத்தில் இருந்து குழுவினருடன் புறப்பட்டு, இராணிப்பேட்டை மாவட்ட நகர ஊரமைப்பு அலுவலகத்தில் இருதுறை திடீர் கூட்டுச்சோதனை மேற்கொள்ள பகல் 15.00 மணிக்கு சென்று சேரப்பட்டது. இருதுறை திடீர் கூட்டுசோதனைக்குழுவினராகிய நாங்கள், இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தின் F-Block, 4th Floor-ல் உள்ள மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அறையை பார்க்க, அந்த அறை பூட்டப்பட்டிருந்தது. அந்த அறைக்கு எதிரில் உள்ள மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தின் உள்ளே சென்று பார்க்க, அந்த ஹாலின் தென் புறத்தில் இரண்டு பெண் அலுவலர்கள் அலுவலகப்பணியில் இருந்தனர். அவர்களில் நகர் ஊரமைப்பு அலுவலகத்தின் நுழைவாயிலுக்கு அருகில்

உட்கார்ந்து பணியில் ஈடுபட்டிருந்த பெண் அலுவலரிடம் இருதுறை திடீர் கூட்டுச்சோதனை குழுவினராகிய நாங்கள் எங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு, வந்திருக்கும் நோக்கம் தெரிவிக்கப்பட்டது. பின்னர், உதவி இயக்குநர் குறித்து விசாரிக்க, உதவி இயக்குநர் திரு.A.ஏழுமலை அவர்கள், நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் உத்திரவின்படி கடந்த 12.10.2026 ஆம் தேதி முதல் வேலூர் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் / இணை இயக்குநர் பொறுப்பையும் கவனித்து வருவதாகவும், அவர் இன்று HACA Meeting-கிற்கு சென்றிருப்பதாக சொன்னார். பின்னர், அவரை விசாரிக்க, அவர் தன்னுடைய பெயர் S.சாந்தி என்றும், தான் மேற்பார்வையாளர் / வரைவாளர் நிலை-2 ஆக இராணிப்பேட்டை நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் பணிபுரிந்து வருவதாக சொன்னார். பின்னர், அவரிடமும், அந்த அலுவலகத்தில் இருந்த திருமதி.ஆரிபா, அளவர்/உதவி வரைவாளர் ஆகியோர்களிடம் சோதனைக்கு வந்த அலுவலர்களாகிய நாங்கள் எங்களை சுயபரிசோதனைக்கு உட்படுத்தி கொண்டு, எங்களிடம் எந்த பணமும் இல்லை என்று உறுதி செய்து காண்பிக்கப்பட்டது. பின்னர், திருமதி.சாந்தி, மேற்பார்வையாளர் அவர்களிடம் 23.10.2026 ஆம் தேதியன்று பணிக்கு வந்தவர்களை பற்றி விசாரிக்க, 1) திரு.வே.கிருஷ்ணபாண்டியன், மேற்பார்வையாளர் / வரைவாளர் நிலை-2 என்பவர் கலவை தாலுக்கா பரதராமிக்கு கள ஆய்விற்காக சென்றிருப்பதாகவும், 2) திருமதி.ரா.சாந்தி, களப்பணி உதவியாளர் தபால் ஆபீஸிற்கு போயிருப்பதாகவும், 3) திரு.சரவணன், TEXCO Driver அரசு அம்பாசிடர் காருக்கு உபரி பொருட்கள் வாங்க வேலூர் போயிருப்பதாக சொன்னார். பின்னர், திரு.வே.கிருஷ்ணபாண்டியன், மேற்பார்வையாளர்/வரைவாளர் நிலை-2, திரு.சரவணன், TEXCO Driver மற்றும் திருமதி.ரா.சாந்தி, களப்பணி உதவியாளர் ஆகியோரை உடனடியாக அலுவலகத்திற்கு வருமாறு தகவல் அளிக்குமாறு சொல்லப்பட்டது. பின்னர், திருமதி.சாந்தி, மேற்பார்வையாளர், திருமதி.ஆரிபா, அளவர்/உதவி வரைவாளர் ஆகியோரது மேஜைகள் மற்றும் இழுவறைகள், இருக்கைக்கு அருகில் ரேக் மற்றும் பீரோக்கள் ஆகியவற்றை சோதனை செய்ய, அங்கு பதிவேடுகளும், ஆவணக்கோப்புகளும் காணப்பட்டன. பணம் ஏதும் இல்லை. பின்னர், திருமதி.ரா.சாந்தி, களப்பணி உதவியாளர், ஊதியமில்லாத விடுப்பில் இருந்த திருமதி.அ.ரா.கோகிலாவாணி, அளவர்/உதவி வரைவாளர், திரு.வே.கிருஷ்ணபாண்டியன், மேற்பார்வையாளர்/வரைவாளர், ஈட்டிய விடுப்பில் சென்றிருக்கும் திரு.சுந்தரராஜன், உதவியாளர் ஆகியோர்களின் அலுவலக மேஜைகள், கணினி மேஜைகள், அவற்றின் இழுவறைகள் ஆகியவை சோதனை செய்யப்பட்டன. அங்கு பணம் ஏதும் இல்லை. மேலும், அந்த அலுவலகத்தின் வடக்கு புறத்தில் இருந்த இரண்டு ஸ்டீல் பீரோக்கள், ஸ்டீல் ரேக்குகளை சோதனை செய்ய, அவற்றில்

ஆவணங்களும், பதிவேடுகள் இருந்தன. பணம் ஏதும் இல்லை. பின்னர், உதவி இயக்குநர் திரு.எழுமலை அவர்களின் பூட்டியிருந்த அறையை திறக்க சொல்லி, அந்த அறையில் இருந்த உதவி இயக்குநர் அவர்களின் மேஜை இழுவறைகள், தென்கிழக்கு மூலையில் இருந்த ஸ்டீல் பீரோ மற்றும் வடகிழக்கு மூலையில் இருந்த கணினி மேஜை இழுவறைகள் ஆகியவற்றை சோதனை செய்ய, அவற்றில் பணம் ஏதும் இல்லை. மேலும், உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு பக்கத்தில் இருந்த அறை எண்.10 பதிவேடுகள் வைப்பறையை சோதனை செய்ய பணம் ஏதும் இல்லை. பின்னர், சுமார் 15.20 மணியளவில், தபால் ஆபிஸிற்கு போயிருந்த திருமதி.ரா.சாந்தி, களப்பணி உதவியாளர் என்பவரும், 15.30 மணியளவில் திரு.சரவணன், TEXCO Driver என்பவரும், 15.50 மணியளவில் திரு.வே.கிருஷ்ணபாண்டியன், மேற்பார்வையாளர் / வரைவாளர் நிலை-2 என்பவரும் வந்து தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டனர். அவர்களிடம் நாங்கள் எங்களை அறிமுகப்படுத்திக்கொண்டு வந்திருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது. பின்னர், அந்த அலுவலகத்தில் ஆஜரில் இருந்த மேற்படி அலுவலர்களை சோதனை செய்ய, அவர்கள் 23.10.2026 ஆம் தேதி அலுவலகத்திற்கு வந்தபோது, பணியாளர்களின் பணம் கையிருப்பு பதிவேட்டில் குறிக்கப்பட்டிருந்த பணத்திற்கும், அவர்கள் வைத்திருந்த பணம் குறைவாக இருந்த காரணத்தாலும், அந்த பணத்திற்கு தக்க முகாந்திரம் கூறியதாலும் அவர்கள் வைத்திருந்த பணம் அவர்களிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும், திருமதி.சாந்தி, மேற்பார்வையாளர் அவர்களிடம் இராணிப்பேட்டை நகர் ஊரமைப்பு அலுவலகத்தின் பணியாளர்களின் வருகை பதிவேடு கேட்க, அவர் அந்த பதிவேட்டை ஆஜர் செய்தார். அந்த வருகைப்பதிவேடு கைப்பற்றப்பட்டது. மேலும், மேற்படி அலுவலர்களின் கைபேசிகளில் உள்ள UPI Transactions சோதனை செய்யப்பட்டது. அதில், திருமதி.R.சாந்தி, களப்பணி உதவியாளர் என்பவரது கைபேசியில் உள்ள இணைய வழி பரிவர்த்தனைகளை பார்க்க, அவருடைய Gpay App ஆனது 9994796469 என்ற கைபேசி எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது என்று சொன்னார். அதில் Vinoth Kumar - 8883177552 என்ற பெயரில் இருந்து 12.01.2026 ஆம் தேதியன்று Rs.500/-, 05.02.2026 ஆம் தேதியன்று Rs.10,000/-, 26.02.2026 ஆம் தேதியன்று Rs.700/-, 12.03.2026 ஆம் தேதியன்று Rs.4,000/-, 29.04.2026 ஆம் தேதியன்று Rs.6,000/-, Rs.1,000/-, 01.07.2026 ஆம் தேதியன்று Rs.7,500/-, 03.08.2026 ஆம் தேதியன்று Rs.5,020/-, 12.10.2026 ஆம் தேதியன்று Rs.10,000/-, ஆக மொத்தம் ரூ.44,720/- பெறப்பட்டிருந்தது. அதேபோல் Uma Maheswaran - 7708079829 என்ற பெயரில் இருந்து 17.09.2025 ஆம் தேதியன்று Rs.2,000/-, 11.12.2025 ஆம் தேதியன்று Rs.5,000/-, 15.12.2025 ஆம் தேதியன்று Rs.22,000/-, 16.12.2025 ஆம் தேதியன்று Rs.3,000/-, 13.01.2026 ஆம் தேதியன்று Rs.3,000/-, 07.10.2026 ஆம் தேதியன்று

Rs.10,000/-, ஆக மொத்தம் ரூ.45,000/- பெறப்பட்டிருந்தது. அதேபோல் Jeevan Karthikeyan - 7339337667 என்ற பெயரில் இருந்து 04.09.2024 ஆம் தேதியன்று Rs.3,000/-, 08.10.2024 ஆம் தேதியன்று Rs.3,000/-, 02.12.2024 ஆம் தேதியன்று Rs.5,000/-, ஆக மொத்தம் ரூ.11,000/- பெறப்பட்டிருந்தது. அதேபோல் Suresh S - 9443238889 என்ற பெயரில் இருந்து 22.01.2025 ஆம் தேதியன்று Rs.2,000/-, 13.05.2025 ஆம் தேதியன்று Rs.2,000/-, 20.06.2025 ஆம் தேதியன்று Rs.2,000/-, 08.10.2025 ஆம் தேதியன்று Rs.5,000/-, 10.11.2025 ஆம் தேதியன்று Rs.500/-, 12.03.2026 ஆம் தேதியன்று Rs.1,000/-, Rs.2,000/- ஆக மொத்தம் ரூ.14,500/- பெறப்பட்டிருந்தது. அதேபோல் Udayakumar - 9940792040 என்ற பெயரில் இருந்து 19.01.2025 ஆம் தேதியன்று Rs.2,500/-, Rs.500/-, 20.02.2025 ஆம் தேதியன்று Rs.2,000/-, Rs.4,000/-, 10.03.2025 ஆம் தேதியன்று Rs.2,000/-, 06.05.2025 ஆம் தேதியன்று Rs.2,000/-, 20.10.2025 ஆம் தேதியன்று Rs.1,000/-, 29.11.2025 ஆம் தேதியன்று Rs.2,000/-, 09.12.2025 ஆம் தேதியன்று Rs.1,000/-, 12.12.2025 ஆம் தேதியன்று Rs.1,000/-, 15.12.2025 ஆம் தேதியன்று Rs.7,000/-, 02.01.2026 ஆம் தேதியன்று Rs.1,000/-, 12.01.2026 ஆம் தேதியன்று Rs.1,000/-, 21.01.2026 ஆம் தேதியன்று Rs.1,000/-, ஆக மொத்தம் ரூ.28,000/- பெறப்பட்டிருந்தது. அதேபோல் Logamurthy Ragu – xxxxxx9466 என்ற பெயரில் இருந்து 28.04.2025 ஆம் தேதியன்று Rs.500/-, 27.08.2025 ஆம் தேதியன்று Rs.4,000/-, 10.09.2025 ஆம் தேதியன்று Rs.2,000/-, 07.12.2025 ஆம் தேதியன்று Rs.4,000/-, 15.05.2026 ஆம் தேதியன்று Rs.6,000/-, ஆக மொத்தம் Rs.16,500/- பெறப்பட்டிருந்தது. அதேபோல் Yokenthirakumar K – 7845789864 என்ற பெயரில் இருந்து 04.01.2025 ஆம் தேதியன்று Rs.4,000/-, 21.01.2025 ஆம் தேதியன்று Rs.3,000/-, 26.03.2025 ஆம் தேதியன்று Rs.1,000/-, 28.04.2025 ஆம் தேதியன்று Rs.4,000/-, 02.05.2025 ஆம் தேதியன்று Rs.4,000/-, 02.07.2025 ஆம் தேதியன்று Rs.2,000/-, 22.07.2025 ஆம் தேதியன்று Rs.2,000/-, 12.11.2025 ஆம் தேதியன்று Rs.1,000/-, 14.02.2026 ஆம் தேதியன்று Rs.4,000/-, 14.05.2026 ஆம் தேதியன்று Rs.4,000/-, ஆக மொத்தம் Rs.29,000/- பெறப்பட்டிருந்தது. மேற்படி 7 நபர்களிடமிருந்து மொத்தம் ரூ.1,88,720/- ஆகும். மேற்படி திருமதி.சாந்தி, களப்பணி உதவியாளர் அவர்களின் Gpay Transaction மூலம் மேற்படி பணம் பெறப்பட்டது குறித்தும், பணம் அனுப்பிய மேற்படி 7 நபர்களை குறித்தும் திருமதி.சாந்தி, களப்பணி உதவியாளர் அவர்களிடம் விசாரிக்க, அவர்கள் அனைவரும் பதிவு பெற்ற பொறியாளர்கள் என்றும் தான் குடும்ப அவசர தேவைகளுக்காகவும், பிள்ளைகளின் கல்லூரி கட்டண செலவிற்காகவும், மருத்துவ செலவிற்காகவும் பெற்றதாக சொன்னார். மேலும், திருமதி.சாந்தி, மேற்பார்வையாளர் அவர்களிடம் பதிவு பெற்ற பொறியாளர்கள் குறித்து விசாரிக்க, அவரும் திருமதி.சாந்தி

களப்பணி உதவியாளர் சொன்னதையே ஒத்திட்டு சொன்னார். மேற்படி இணைய வழி பரிவர்த்தனைகளை சந்தேகத்திற்கு இடமாகவும், ஏற்புடையதாகவும் இல்லை எனவே மேற்படி பரிவர்த்தனை விவரம் இருதுறை திடீர் கூட்டுச்சோதனை மகஜரில் குறிக்கப்பட்டது. பின்னர், திருமதி.சாந்தி, மேற்பார்வையாளர் அவர்களிடம் பதிவு பெற்ற பொறியாளர்களின் விவரங்கள் கேட்க, அவர் Registered Professionals / Developers Details என்ற இரண்டு தாள்கள் கொண்ட பிரின்ட் அவுட் ஒன்றை கொடுத்தார். அதில் மொத்தம் 30 பொறியாளர்களின் விவரங்கள் இருந்தன. மேற்படி Registered Professionals / Developers Details என்ற இரண்டு தாள்கள் கொண்ட பிரின்ட் அவுட்டானது கைப்பற்றப்பட்டது. மேலும், தினசரி பார்வையாளர்கள் வரும்போது அவர்களின் விவரங்கள் பதியப்பட்ட பதிவேடு 2024 ஆம் ஆண்டு முதல் கேட்க, அவர் 1) பார்வையாளர் பதிவேடு 08.05.2024 To 19.09.2024 வரை, 2) பார்வையாளர் பதிவேடு 20.09.2024 To 17.04.2025 வரை, 3) பார்வையாளர் பதிவேடு 28.08.2025 To 14.05.2026 வரை மற்றும் 4) பார்வையாளர் பதிவேடு 14.05.2026 To 21.10.2026 வரை ஆகிய நான்கு பதிவேடுகளை ஆஜர் செய்தார். மேற்படி நான்கு பதிவேடுகளும் கைப்பற்றப்பட்டது. மேற்படி பதிவேடுகளில் பார்வையாளர்களில் பதிவு செய்யப்பட்ட பொறியாளர்கள் வருகை தினத்தையும், திருமதி.சாந்தி, களப்பணி உதவியாளர் அவர்களின் கைபேசிக்கு பணம் அனுப்பியிருந்த தேதியும் பலவற்றில் ஒத்திருந்தன. பின்னர், மாவட்ட ஆட்சியர் அலுவலக F-Block தரைத்தள போர்டிகோவில் நிறுத்தப்பட்டிருந்த நகர் ஊரமைப்பு உதவி இயக்குநரின் அரசு வாகனம் பதிவு எண்.TN-01-G-6090 (அம்பாசிடர் கார்)-ஐ ஓட்டுனர் திரு.சரவணன் முன்னிலையில் சோதனை செய்ய, அந்த காரில் பணம் ஏதும் இல்லை. மாலை சுமார் 18.40 மணியளவில், ஏற்கனவே தகவல் தெரிவித்திருந்ததின் பேரில் உதவி இயக்குநர் திரு.ஏழுமலை அவர்கள் சோதனைக்குழுவினரிடம் வந்து தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டார். அவரிடம் இருதுறை திடீர் சோதனையின் விவரங்கள் தெரிவிக்கப்பட்டன. பின்னர், அவரது கைபேசியை வாங்கி Gpay Transaction பார்வையிடப்பட்டதில் சந்தேகத்திற்கிடமான பணப்பரிவர்த்தனைகள் ஏதும் இல்லை. மேற்படி இரு துறை திடீர் சோதனையின்போது, பணம் ஏதும் கைப்பற்றப்படவில்லை. வருகைப்பதிவேடு, Registered Professionals / Developers Details மற்றும் நான்கு பார்வையாளர் பதிவேடுகள் கைப்பற்றப்பட்டது. மேலும், திருமதி.சாந்தி, களப்பணி உதவியாளர் என்பவரின் கைபேசியில் இருந்த ஆன்லைன் பணப்பரிவர்த்தனைகள் குறித்துக்கொள்ளப்பட்டன. மேற்படி இருதுறை திடீர் கூட்டு சோதனையானது, 23.10.2026 ஆம் தேதி இரவு 21.00 மணிக்கு முடிக்கப்பட்டு, இருதுறை திடீர் கூட்டுச்சோதனை செயல்முறையில் நானும், இராணிப்பேட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய தாங்களும், திரு.A.ஏழுமலை, உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,

இராணிப்பேட்டை மற்றும் திருமதி.S.சாந்தி, மேற்பார்வையாளர்/வரைவாளர் நிலை-2, மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், இராணிப்பேட்டை ஆகியோர் கையொப்பம் செய்தோம். அதன் நகலானது திருமதி.ரா.சாந்தி, களப்பணி உதவியாளர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், இராணிப்பேட்டை என்பவருக்கு கொடுக்கப்பட்டது. மேலும், திருமதி.ரா.சாந்தி, களப்பணி உதவியாளர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், இராணிப்பேட்டை என்பவரின் கைபேசி மின்னணு பணப்பரிவர்த்தனை பதிவுகள் மற்றும் பிற சூழ்நிலை ஆதாரங்கள் ஆகியவற்றை பார்க்கும்போது, மேற்படி திருமதி.ரா.சாந்தி, களப்பணி உதவியாளர என்பவர் பதிவு பெற்ற பொறியாளர்களிடமிருந்தும், இடைத்தரகர்கள் முலமாகவும் லஞ்சமாக பணம் பெற்றிருக்கக்கூடும் என தெரிய வருகிறது. எனவே மேற்படி திருமதி.ரா.சாந்தி, களப்பணி உதவியாளர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், இராணிப்பேட்டை என்பவர் மீது ஊழல் தடுப்பு சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் இராணிப்பேட்டை மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் கடந்த 23.10.2026 ஆம் தேதி நடத்திய இருதுறை திடீர் கூட்டுச்சோதனையில் கைப்பற்றப்பட்ட பதிவேடுகள், Registered Professionals / Developers Details, என்னால் பதிவு செய்யப்பட்ட திருமதி.ரா.சாந்தி, களப்பணி உதவியாளர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், இராணிப்பேட்டை என்பவரது வாக்குமூலம், நாள்:23.10.2026 மற்றும் இருதுறை திடீர் கூட்டு சோதனை நடவடிக்கைகள் குறித்த செயல்முறை ஆகியவற்றை விசாரணைக்காக இத்துடன் அசலாக ஒப்படைக்கப்படுகிறது. தங்கள் நம்பிக்கைக்குரிய Sd/-xxxxxxx (து.ஜெகதீஸ்வரன்) 24.10.2026

Sir, Received the complaint on 24.10.2026 at 16.00 hrs and a case in Ranipet V&AC Cr.No.10/2026 u/s 7(a) of the Prevention of Corruption Act,1988 as amended by the PC (Amendment) Act 2018 was registered on 24.10.2026 at 16.30 hrs. Sd/-xxxxx (S.Vijayalakshmi) 24/10/26 Inspector of Police, V&AC, Ranipet.

The FIR in original along with the complaint, Statement of Tmt.R.Santhi, Field Assistant recorded by the Deputy Inspection Cell Officer, Joint Surprise check proceedings in original sent to the Hon'ble Principal District and Sessions Judge / Special Judge, Ranipet and other copies to the Officers concerned.

S. Vijayalakshmi
24/10/26

Inspector of Police
Vigilance & Anti-Corruption
Ranipet